பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**29 04 2026** **WEDNESDAY** **7.15 AM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) மேற்குவங்க சட்டப்பேரவைக்கு இரண்டாவது மற்றும் இறுதி கட்டமாக **142** தொகுதிகளில் வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது.

2) உத்தரப்பிரதேசத்தின் **Hardoi**-ல், **594** கிலோமீட்டர் நீள கங்கா விரைவுச் சாலையை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைக்கிறார்.

3) குஜராத் மாநிலத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பிஜேபி அதிக இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

4) ஈக்வடார் வெளியுறவுத்துறை அமைச்சர் மூன்று நாள் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

5) ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் ஒடிஷா அணியை, ஈஸ்ட் பெங்கால் அணி வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<<<<<<>>>>>>>>>>>

மேற்குவங்க சட்டப்பேரவைக்கு இரண்டாவது மற்றும் இறுதி கட்டமாக **142** தொகுதிகளில் வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது.

பெண்கள் உள்ளிட்ட ஏராளமானோர் வரிசையில் காத்திருந்து வாக்களித்து வருகிறார்கள்.

இம்மாநிலத்தில் முதல்கட்டமாக 152 தொகுதிகளில் கடந்த 23-ஆம் தேதி தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுடன் வாக்குப்பதிவு நடைபெற்று முடிந்தததது.

காலை 7 மணிக்கு தொடங்கியுள்ள வாக்குப்பதிவு, மாலை 6 மணிவரை நடைபெறுகிறது.

வாக்குப்பதிவை முன்னிட்டு பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது.

பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இன்றைய தேர்தலில் ஆயிரத்து 448 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 3 கோடியே 21 லட்சத்து 73 ஆயிரத்து 837 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

தமிழகம், அஸ்ஸாம், கேரளம், புதுச்சேரி மற்றும் மேற்குவங்க சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகள் மே 4ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

<<<<<<<<<>>>>>>>>>>

மேற்குவங்க மாநில இரண்டாம் கட்டத் தேர்தலில் அதிக அளவில் வாக்காளர்கள் தங்களது வாக்கினை செலுத்த வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த சட்டப்பேரவைத் தேர்தலில் ஜனநாயகம் மற்றும் பங்களிப்பை அதிக வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ள ஏதுவாக, மகளிர், இளையோர், சாதனை அளவில் வாக்களிக்க வேண்டியது முக்கியமானது என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<<<>>>>>>>>>>

உத்தரப்பிரதேச மாநிலத்திற்கு சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி தமது பயணத்தின் இரண்டாம் நாளான இன்று ஹர்தோய் என்ற இடத்தில் கங்கா விரைவுச் சாலையை தொடங்கிவைக்கிறார்.

பின்னர், அங்கு நடைபெறும் நிகழ்ச்சியில் அவர் உரையாற்ற உள்ளார்.

36 ஆயிரத்து 230 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 594 கிலோமீட்டர் நீளத்திற்கு ஆறுவழிச் சாலையாக அமைக்கப்பட்டுள்ள இந்த விரைவுச் சாலை, அதிவேக வாகனங்கள் செல்லும் வகையில் பசுமை சாலையாக உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த விரைவுச் சாலை அமைக்கப்பட்டதன் மூலம், மீரட் — பிரயாக்ராஜ் இடையேயான பயண நேரம் 12 மணியிலிருந்து, ஆறு மணிநேரமாக குறையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இன்று காலை வாரணாசியில் உள்ள காசி விஸ்வநாதர் கோவிலில் பிரதமர் திரு நரேந்திர மோடி சிறப்பு பூஜை செய்து வழிபடுகிறார்.

வாரணாசியில் நேற்று நடைபெற்ற மகளிர் மாநாட்டில் பங்கேற்று பேசிய பிரதமர், முக்கியமான பிரச்சினைகளில் மகளிர் முடிவெடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தினார்.

மகளிர் இடஒதுக்கீடு மசோதாவிற்கு நாடாளுமன்றத்தில் ஆதரவு அளிக்காததன் மூலம், எதிர்க்கட்சிகள் பெண்களை ஏமாற்றிவிட்டதாக திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டினார்.

<<<<<<<<<<>>>>>>>>>>

குஜராத் மாநில உள்ளாட்சித் தேர்தலில் பிஜேபி பெருவாரியான இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

மாநிலத்தில் உள்ள அனைத்து முக்கிய மாநகராட்சிகளையும் பிஜேபி கைப்பற்றியுள்ளது.

இந்த தேர்தலில் மொத்தம் உள்ள 9 ஆயிரத்து 200 இடங்களில் பிஜேபி 7 ஆயிரத்து 424 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

காங்கிரஸ் கட்சி ஆயிரத்து 720 இடங்களை மட்டுமே கைப்பற்றியுள்ளது.

இதர கட்சிகள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் 7 ஆயிரத்து 40 இடங்களில் வெற்றிபெற்றுள்ளனர்.

மாநகராட்சிகளை பொறுத்தவரை அகமதாபாத், வதோதரா, சூரத், ராஜ்கோட் உள்ளிட்ட 13 மாநகராட்சிகளை பிஜேபி கைப்பற்றியுள்ளது.

இந்த மாநகராட்சியில் அடங்கிய தொள்ளாயிரத்து 33 இடங்களில் வெற்றிபெற்று அக்கட்சி முதலிடத்தை பிடித்துள்ளது.

காங்கிரஸ் கட்சியை பொறுத்தவரை மாநகராட்சிகளில் 95 இடங்களில் மட்டுமே வெற்றிபெற்றுள்ளது.

குஜராத்தில் பிஜேபிக்கு மகத்தான வெற்றியை வழங்கியுள்ள வாக்காளர்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார்.

பிஜேபி-க்கும், குஜராத் மாநிலத்திற்கும் இடையேயான இணைப்பை வலுப்படுத்துவதாக உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளது என்று சமூக வலைதளத்தில் பிரதமர் பதிவிட்டுள்ளார்.

மாநில அரசின் நல்லாட்சி மற்றும் வளர்ச்சி திட்டங்களில் நம்பிக்கை வைத்து வாக்காளர்கள் மீண்டும் இந்த வெற்றியை அளித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, பிஜேபி தலைவர் திரு நிதின் நபின் ஆகியோரும் குஜராத் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

<<<<<<<<<<>>>>>>>>>>

உலக அறிவுசார் சொத்துரிமை மற்றும் புத்தாக்க நடவடிக்கைகள் அனைத்துத்தரப்பினரையும் சென்றடைய வேண்டியது அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று உலக அறிவுசார் சொத்துரிமை தின விழாவின் நிறைவு நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று பேசினார்.

இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் தங்களின் புதிய யோசனைகளை பாதுகாக்கப்பட்ட அறிவுசார் சொத்துரிமையாக மாற்றுவதற்கு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அவர்கள் தங்களின் பிரத்யேக உரிமைகளையும், இதர அறிவுசார் சொத்துரிமையையும் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விளையாட்டுத் தொடர்பான அறிவுசார் சொத்துரிமை பதிவுக்கான கட்டணம் மூன்றாண்டுகளுக்கு ரத்து செய்யப்பட்டிருப்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

விளையாட்டுத் துறையில் புத்தாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான சிறப்பு சலுகையாக இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் திரு பியூஷ் கோயல் கூறினார்.

<<<<<<<<<<>>>>>>>>>>

இமாச்சாலப்பிரதேசம் சென்றுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, **Rohting**-ல் உள்ள அடல் சுரங்கப்பாதைக்கு செல்லவிருந்தது மோசமான வானிலை காரணமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

பலத்த காற்று, மழை மற்றும் பனிப்பொழிவுக்கான வாய்ப்பு அதிகம் இருப்பதால், அவரது இந்த பயணம் ரத்து செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அடல் சுரங்கப்பாதையை பார்வையிட்டு, எல்லை சாலைகள் நிறுவன அதிகாரிகளுடன் கலந்துரையாட குடியரசுத் தலைவர் திட்டமிட்டிருந்தார்.

<<<<<<<<<<>>>>>>>>>>

முற்றிலும் டிஜிட்டல் அடிப்படையிலான மக்கள் தொகை கணக்கெடுப்பு, ஜார்கண்டில் வரும் ஒன்றாம் தேதி தொடங்குகிறது.

ராஞ்சியில் செய்தியாளர்களிடம் பேசிய மக்கள் தொகை செயல்பாடுகளுக்கான இயக்குநர் திரு பிரபாத் குமார், இணை இயக்குநர் திரு சத்யேந்திர குப்தா ஆகியோர் முதல்கட்டமாக வரும் ஒன்றாம்

தேதிமுதல், **15-**ஆம் தேதிவரை மக்கள் தாங்களாகவே பதிவு செய்து கொள்ளும் நடைமுறை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து அடுத்த மாதம் **16-**ஆம் தேதிமுதல், ஜூன் **14-**ஆம் தேதிவரை வீடு வீடாக சென்று கணக்கெடுப்பு நடைபெறும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

வீடுகள் குறித்த கணக்கெடுப்பும் அங்குள்ள நபர்களின் எண்ணிக்கை குறித்த கணக்கெடுப்பும் நடத்தப்பட்டு, அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் இந்த பணிகள் நிறைவடையும் என்று அவர்கள் கூறினர்.

பள்ளி ஆசிரியர்கள் உட்பட **75** ஆயிரம் பேர் மக்கள் தொகை கணக்கெடுப்பில் ஈடுபடுவார்கள் என்று ஜார்கண்ட் அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<<<<<<<>>>>>>>>>>

மத அடிப்படையிலான செயல்பாடுகளை காரணம் காட்டி, சாலை மறியலில் ஈடுபடுவதை தடுக்க மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மத சுதந்திரம் மற்றும் சபரிமலை உள்ளிட்ட வழிபாட்டுத் தலங்களில் பெண்களுக்கு எதிரான பாகுபாடு தொடர்பான வழக்கை விசாரித்த, தலைமை நீதிபதி திரு சூரியகாந்த் தலைமையிலான ஒன்பது

நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு, இந்த உத்தரவை பிறப்பித்தது.

மதச்சார்பற்ற நடைமுறை பாதுகாக்கப்பட வேண்டியதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்று நீதிபதிகள் அந்த உத்தரவில் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில், வழிபாட்டு நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் தங்கள் உத்தரவில் கூறியுள்ளனர்.

<<<<<<<<<>>>>>>>>>

ஈக்வடார் வெளியுறவுத்துறை அமைச்சர் **Gabriela Sommerfeld** மூன்று நாள் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

புதுதில்லியில் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கரை அவர் சந்தித்து பேசவுள்ளார்.

ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்திலும், ஈக்வடார் அமைச்சர் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்த உள்ளார்.

இதைத்தொடர்ந்து மத்திய அமைச்சர்கள் திரு ஜெ பி நட்டா, திரு பியூஷ்கோயல், வெளியுறவு இணையமைச்சர் திருமதி பபித்ரா மார்கரிட்டாவையும் **Gabriela Sommerfeld** சந்தித்து பேச உள்ளார்.

<<<<<<<<<>>>>>>>>>>

மாலியில் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல்களுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ள மத்திய அரசு, கடினமான இந்த தருணத்தில் அந்நாட்டு அரசுக்கு இந்தியா ஆதரவு தெரிவிப்பதாக கூறியுள்ளது.

இந்த தீவிரவாத தாக்குதலில் அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜென்ரல் **Sadio Camara-**வும் கொல்லப்பட்டார்.

தீவிரவாதத்தை அனைத்து வடிவிலும் முறியடிக்க இந்தியா உறுதிபூண்டிருப்பதாகவும், அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யும் அனைத்து முயற்சிகளுக்கும் இந்தியா தனது ஆதரவை வழங்கும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<<<<<>>>>>>>>>>

மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழலுக்கு இடையே ரஷ்யா உடனான ஈரானின் ஒத்துழைப்பு தொடர்ந்து நீடிக்கும் என்று அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு அப்பாஸ் அராச்சி தெரிவித்துள்ளார்.

செயின்ட் பீட்டர்ஸ் பர்கில் ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புட்டினை நேற்று அவர் சந்தித்து விரிவான ஆலோசனை நடத்தினார்.

ஈரான் — ரஷ்யா இடையேயான நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும், மேற்காசியாவில் பதற்றத்தை தணிக்க, ரஷ்யா அளித்துவரும் ஆதரவுக்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

அங்கு அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு ரஷ்யா அனைத்து உதவிகளையும் அளிக்க தயாராக உள்ளது என திரு விளாடிமீர் புட்டின் தெரிவித்தார்.

சுமார் இரண்டு மணிநேரம் நடைபெற்ற இந்த சந்திப்பு, ஆக்கப்பூர்வமான வகையில் அமைந்ததாக அதிபர் மாளிகை செய்தித் தொடர்பாளர் திரு **Dimtry Peskov** தெரிவித்துள்ளார்.

<<<<<<<<<>>>>>>>>>>

பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகள் அமைப்பான **OPEC**-ல் இருந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வெளியேறுவதாக அறிவித்துள்ளது.

வரும் ஒன்றாம் தேதிமுதல் அந்த அமைப்பிலிருந்து வெளியேறுவது என்று முடிவெடுத்திருப்பதாக **UAE** தெரிவித்துள்ளது.

தேசிய உற்பத்திக் கொள்கை, பெட்ரோலியப் பொருட்களின் திறன் மற்றும் நீண்டகால பொருளாதார முன்னுரிமைகள் தொடர்பாக ஒருங்கிணைந்த மறுஆய்வு நடவடிக்கையை தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக **UAE** வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

உலக அளவில் எரிசக்தி தேவையை உறுதியாக எதிர்கொள்வதற்கான உறுதிபாட்டையும், தங்கள் நாட்டின் நலனையும் அடிப்படையாக கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<<<<>>>>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் ஒடிஷா அணியை, ஈஸ்ட் பெங்கால் அணி வென்றது.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி **3-0** என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

--------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி **6** விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வென்றது.

சண்டிகரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில், **4** விக்கெட் இழப்பிற்கு **222** ரன் எடுத்தது.

**223** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ராஜஸ்தான் அணி **19** புள்ளி இரண்டு ஓவரில், **228** ரன் எடுத்து வெற்றிபெற்றது.

**இன்று நடைபெறும் ஆட்டத்தில், மும்பை அணி - ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.**

**மும்பையில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.**

**<<<<<<<<<<<END>>>>>>>>>>>**